# முரசொலி

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 56 ஆங்கீரச சித்திரை 19 (01. 05. 1992) வெள்ளி


## சகல தொழிற் சங்கங்களும் இணைந்து நடத்தும் மேதின ஊர்வலம்

யாழ் குடாநாட்டில் உள்ள சகல தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து இன்று மேதினத்தை மிகவும் கோலாகலமாகக் கொண்டாடுகின்றன பல்வேறு இடங்களில் பந்தல்களும், அலங்கார வளைவுகளும் நிறுவப்பட்டுள்ளன. தொழிலாளர் வர்க்கத்தின் எழுச்சிப் பேரணி மருதனாமடத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வருகிறது. யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் மிகப்பிரமாண்டமான கூட்டம் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன: மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ள யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் இருந்து இம் மேதினக் கூட்டத்தை காண பல லட்சக்கணக்கான மக்கள் யாழ் குடாநாட்டின் மூலை முடுக்குகளில் இருந்து அணி அணியாக வந்து சேர்வார்கள். இம்மேதினப் பொது கூட்டம் இன்று மாலை 6-30 மணிக்கு ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. 15

# புயலாக சீண்டும் எதிரியின் அடக்குமுறை;
# மலையாக தாங்கிநிற்கும் எம்மக்கள்

## மேதினச் செய்தியில் தேசியத் தலைவர் பிரபாகரன் பெருமிதம்



"போராட்டப் பளுவை ஒரு தோளிலும் பொருளாதாரப் பளுவை மறு தோளிலுமாக உறுதிதளராது சுமந்து நிற்கும் தமிழ்ப் பாட்டாளி வர்க்கத்தை நான் பாராட்டுகிறேன்;

புயலாக சீண்டும் எதிரியின் அடக்குமுறை அழுத்தங்களை எல்லாம் மலையாகத் தாங்கி நிற்கும் எமது மக்களை நான் பாராட்டுகிறேன்"

இவ்வாறு மேதினத்தை முன்னிட்டு தலைவர் வே. பிரபாகரன் விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளார்,

இச் செய்தியில் மேலும்—

இன்று தொழிலாளர் நாள் உலகப் பாட்டாளிகளின் எழுச்சி நாள். உழைக்கும் மக்களின் ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் புரட்சி நாள் உழைக்கும் மக்களின் உழைப்பு சக்தியே ஒரு தேசத்தின் ஜீவாதார சக்தி. உழைப்பவனே பொருளுலகத்தைப் படைக்கிறான், மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறான் உழைக்கும் கரங்களே மனித வாழ்க்கையை இயக்கும் கரங்கள்.

### அழுத்தத்தின் மத்தியில்...

இந்த உழைக்கும் மனிதர்களுக்கு நாம் இன்று விழா எடுக்கிறோம்

ஒரு யுத்த சூழ்நிலையில் எதிரியின் படையெடுப்புகளுக்கு மத்தியில், பெரிய தொரு பொருளாதாரச் சுமையின் அழுத்தங்களைத் தாங்கி நின்று நாம் பாட்டாளிகள் தினத்தைக் கொண்டாடுகிறோம்

தமிழீழப் பாட்டாளி வர்க்கம் என்றுமில்லாத பெரும் நெருக்கடியைச் சந்தித்து நிற்கிறது. இலவாதனர்சின் ஈவிரக்கமற்ற கொள்கையால் உழைத்து வாழும் எமது மக்கள் ஒரு ஜீவமரணப் போராட்டத்தை எதிர்கொண்டு நிற்கிறார்கள். எமது மக்களின் உழைக்கும் கரங்களைத் துண்டித்துவிட்டு அவர்களின் நாளாந்த வாழ்க்கையை நரகமாக்கிவிட எதிரியானவன் கங்கணம்கட்டி நிற்கிறான் எமது பாட்டாளி வர்க்கம் மீது மிகவும் கொடூரமான ஒரு பொருளாதார யுத்தம் ஏவிவிடப்பட்டிருக்கிறது

## மே தின ஊர்வலம் செல்லும் பாதைகள்

இன்று நடைபெறவுள்ள மே தின ஊர்வலமானது பகல் 2 மணிக்கு மருதனாமடம் சந்தியிலிருந்து பாண்ட் வாத்திய இசையுடன் ஆரம்பமாகும்

அங்கிருந்து காங்கேசன்துறை வீதியூடாக வந்து நாச்சிமார் கோவில் சந்தி, இராமநாதன் வீதி, கலட்டிச் சந்தி, பிறவுண் வீதி, தொழில் நுட்பக்கல்லூரி முன்பாக உள்ள பாதை ஆகிய வழிகளால் பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தை வந்தடையும்

## இன்றைய மே தினத்தில் அணிதிரளுமாறு கோரிக்கை

தமிழீழத்தில் இதுவரை காலமும் நடைபெற்ற மே தினம் சர்வதேச அரங்கில் அரசியல் ரீதியான வளர்ச்சியை எடுத்துக்காட்டியுள்ளது.

அதேபோன்று ஒதுக்கப்பட்ட தேசங்களே ஒன்றுபடுங்கள் என்ற கோசத்தை முன்வைத்து இவ்வருட மே தினம் அமைகின்றது.

எனவே இந்த ஊர்வலத்திலும் பொதுக் கூட்டத்திலும் எமது மக்களை அணிதிரளுமாறு தமிழீழ விடுதலை புலிகள் யாழ் மாவட்ட அரசியல் பிரிவு கேட்டுள்ளது

## மண்டைதீவிலிருந்து கவியர் தாக்குதல்

மண்டைதீவில் இருந்து இராணுவத்தினர் நேற்று அதிகாலை கடற்பிரதேசங்களை நோக்கி கவியர் தாக்குதல்களை பல தடவைகள் மேற்கொண்டனர்.

இதனால் குடாக்கரையில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீன்பிடிக்காமலே திரும்பினர் இதன் காரணமாக நேற்றைய தினம் குருநகர், பாஷையூர் போன்ற இடங்களில் உள்ள மீன் சந்தைகளில் மீன் விலை வழமையை விட அதிகமாக இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது (15)

## கீரிமலையில் பீரங்கித்தாக்கு

கீரிமலை கடற்பகுதியிலிருந்து நேற்றுக்காலை கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர் இதேவேளை கீரிமலை காவலரண்களிலிருந்தும் துப்பாக்கிச் சூடும், ஷெல் வீச்சும் சரமாரியாக மேற்கொள்ளப்பட்டன.

## மே தின சைக்கிள் பாதுகாப்பு

யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் வரும் தொழிலாளர்கள் தமது துவிச்சக்கர வண்டிகளை பாதுகாப்பாக வைப்பதற்காக கொக்குவில் இந்துக் கல்லூரி, திருநெல்வேலி சந்தைப்பகுதி, திருநெல்வேலி சிவன் கோவிலடி, கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி மைதானம் என்பன ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (15)

## தச்சன்காடு காவலரண் மீது அதிரடித் தாக்குதல்

தச்சன்காடுப் பகுதியில் உள்ள இராணுவக் காவலரண் ஒன்று மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் அதிரடித் தாக்குதலை நடத்தினர்.

30 நிமிடநேரம் நடைபெற்ற இந்த தாக்குதலின் இராணுவ தளபாடங்கள் கைப்பற்றப்பட்டன.

மோதலில் கப்டன் செந்தில் (செ. சசிதரன் கொக்குவில்) கப்டன் தவம் (வே. தவகுமார் சாவகச்சேரி) 2ம் லெப் சருவண்ணன் (க. அருணதாஸ் யாழ்ப்பாணம்) ஆகியோர் வீரச்சாவு எய்தினர் 15

★ ஒபரேஷன் கிறீன் பெல்ட் - 3

பெரும் நெருக்கடியைச் சந்தித்து நிற்கிறது. இவ்வாறான ஒரு பொருளாதார யுத்தம் ஏவிவிடப்பட்டிருக்கிறது

## அடக்குமுறை யுக்தி...

ஒரு மக்கள் சமுதாயத்தின் பொருளாதார வாழ்விற்கு மூலாதாரமான உழைப்பு சக்தியை முடக்கிவிட்டால், அந்த மக்களின் மனவுறுதியை, ஆன்மதிடத்தை, போராட்ட உறுதியை உடைத்தெறிந்து விடலாம் என்பது இங்குள்ள ஆளும் வர்க்கத்தின் தந்திரோபாயம். இது எல்லாக்காலத்திலும், எல்லா சமூகங்களிலும் எல்லா அடக்குமுறையாளர்களாலும் கையாளப்படும் ஒரு ஒடுக்குமுறை யுக்தி எமது எதிரியும் நீண்டகாலமாகவே இந்த அணுகுமுறையைக் கடைப்பிடித்து வருகிறான். இதன் ஒரு மோசமான விளைவாக உழைத்து வாழும் எமது மக்கள் சந்தித்த சோகம் நிறைந்த வரலாற்றை சொற்களால் விபரிக்க முடியாது.

சாவுக்கும் அழிவுக்கும் அப்பால், பசிக்கும் பஞ்சத்திற்கும் அப்பால், சுகநல வாழ்வின் சுகபோகங்களுக்கும் அப்பால், ஒரு சுதந்திரமான கௌரவமான வாழ்விக்காதல் கொண்டு நிற்கும் எமது மக்களின் இலட்சியப் பற்றை நான் பாராட்டுகிறேன்.

...04ஆம் பக்கம் பார்க்க

தாக்குதலை நடத்தினர்.

30 நிமிடநேரம் நடைபெற்ற இந்த தாக்குதலின் போது படையினர் இழப்புகளுடன் பின்வாங்கி முகாமிற்கு தப்பியோடினர்.

இத்தாக்குதலில் ரி - 56 துப்பாக்கி அதற்கான மகசீன் - 3, ரி - 81 மகசீன் - 3, ஏ கே எல் எம் ஜி ட்ரம் மகசீன், உட்பட மேலும் பல

## வீரச்சாவு

ஆனையிறவில் நேற்று காலை இராணுவத்தினர் மீது புலிகள் திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இத்தாக்குதலில் 2 ஆம் லெப். தவபாலன் (த இராஜேஸ்வரன் உரும்பிராய்) வீரச்சாவு எய்தினார்.

## ★ ஒபரேஷன் கிறீன் பெல்ட் - 3
# உயிலங்குளத்தில் தொடர்ந்து மோதல்

மன்னாரில் வங்காலை, மாந்தை இராணுவ முகாம்களிலிருந்து வெளியேறிய படையினருடன் உயிலங்குளம் பகுதியில் புலிகள் தொடர்ந்து மூன்றாம் நாளாக மோதி வருகின்றனர்.

இதேவேளை செட்டிகுளத்திலிருந்து மன்னார் வீதியூடாக முன்னேற முயன்ற படையினரையும் இடைமறித்து புலிகள் தீவிர தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

ஒப்ரேஷன் கிறீன் பெல்ட்-3 என்ற இந்நடவடிக்கை வவுனியா-மன்னார் வீதியை தமது கட்டுப்பாட்டிக்கொண்டுவரவே படையினர் மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே இம்மோதல்களினால் மன்னாரில் சுமார் 30 கிராமங்களிலிருந்து சுமார் இரண்டாயிரம் குடும்பங்கள் மடு முகாமிற்கு இரவோடு இரவாக இடம்பெயர்ந்தனர்.

—04 ஆம் பக்கம் பார்க்க

நுட்பக் கல்லூரி மைதானம் என்பன ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (15)

## தேநீர்க்கடைகள் திறந்திருக்கும்

மேதின ஊர்வலத்தில் பங்கேற்கும் மக்களின் நலன் கருதி தேநீர்க்கடை உரிமையாளர்களையும் துவிச்சக்கர வண்டி மற்றும் வாகன ரியூப் ஒட்டும் நிலையங்களையும் திறந்து வைத்திருக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊர்வலத்தில் பங்குபற்றும் மக்களிற்கு தாகசாந்தி நிலையங்கள் ஊர்வலம் செல்கின்ற பாதைகளில் அமைக்கப்படவுள்ளன.

# தமிழக மீனவர் மீதான தாக்குதல் தொடர்கிறது!

தமிழ் நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல் மேற்கொள்வது தொடர்வதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இராமேஸ்வரத்திலிருந்து மீன் பிடிப்பதற்காக கடலுக்குச் சென்ற ஐந்து மீனவர்கள் கச்சதீவுக்கருகில் வைத்து இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளானதாக சென்னைச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளான தமிழக மீனவர்கள் இராமேஸ்வரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல் தொடர்வது குறித்து இந்திய அரசு இலங்கை அரசிடம் கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## காங்கேசன் அணி சாம்பியனானது

மல்லாகம் இந்து வாலிபர் மன்றத்தினால் நடத்தப்பட்ட 'செற் அப்' முறையிலான சுமுகத்தாய்ப்போட்டியில் காங்கேசன்துறை விளையாட்டுக் கழகம் சாம்பியன் ஆனது.

இப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த 27ஆம் திகதி மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற பொழுது, காங்கேசன்துறை விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்து ஆடிய பாஸையூர் சென் அந்தனீஸ் விளையாட்டுக்கழக அணியை 3:1 என்ற செற் கணக்கில் வென்று சாம்பியன் பட்டத்தைத் தட்டிக்கொண்டது. (16)

## ஆராய்ச்சி வெற்றி பெற்றால் மனிதனுக்கு மாட்டின் இரத்தம்

இரத்ததானம் செய்பவர்கள் தொகை நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருவதினால் மாட்டின் இரத்தத்தை மனிதனுக்கு செலுத்தலாமா என்ற ஆராய்ச்சியில் அவுஸ்திரேலிய மருத்துவத் துறை விஞ்ஞானிகள் இறங்கியுள்ளனர்.

இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களில் ஹீமோகுளோபின் கலந்திருக்கிறது. இதுதான் பிராணவாயுவைச் சுமந்து செல்லும் ஆற்றல் உள்ளது. மாட்டின் இரத்தத்தில் சிவப்பு அணுக்கள் அதிகம். அதனால் மாட்டின் இரத்தத்தை மனிதனுக்கு ஏற்றக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக உள்ளமை இதுவரை மேற்கொண்ட ஆராய்ச்சியில் இருந்து தெரியவந்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போதைக்கு மாட்டின் இரத்தத்தை நோய் வாய்ப்பட்ட நாய்களுக்கு மட்டுமே செலுத்தி வருகிறார்கள். (16)

## சிறிய செய்திகள்

### நாயும் சிங்கமும்

வீட்டுக்குள் புகுந்த மலைச் சிங்கம் ஒன்று கனேடியர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டது.

தனது நாயை விரட்டி வந்த சிங்கம் அறைக்குள் புகுந்ததும் அவர் உடனே கதவை மூடிவிட்டு சிங்கத்தைச் சுட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

### பேனாவுடன் துப்பாக்கியும்

நியூயோர்க் நகரப்பள்ளிச் சிறுவர்கள் கையில் துப்பாக்கிகளை வைத்துக்கொண்டு ஒருவரையொருவர் சுட்டுக் கொல்கின்றனர்.

துப்பாக்கிச் சண்டையிலும் சிறுவர்கள் யாவரும் புத்திளம் பருவத்தினர் தான். இந்த ஆண்டு நியூயோர்க் நகரில் 16 வயதுக்குட்பட்ட 500 பேருக்குத் துப்பாக்கிக் குண்டுக் காயம் ஏற்பட்டுள்ளது. அதில் 60 பேர் இறந்துபோயுள்ளனர்.

நியூயோர்க் நகரிலுள்ள 120 பொது உயர்நிலைப்பள்ளிகளில் ஆயுத நடமாட்டம் சகஜமாக இருக்கிறது. இந்தக் கல்வியாண்டில் 3843 சூட்டுச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

ஆரம்பத்தில் கத்திகளையும் பிளேடுகளையும்தான் மாணவர்கள் பயன்படுத்தினர். இப்போது துப்பாக்கிகளை மாணவர்கள் சொந்தமாக வாங்கி வைத்துள்ளனர்.

### கொழும்பில் மட்டுமே பரீட்சை

1991ஆம் ஆண்டிற்குரிய பொது எழுதுநர் சேவையின் அதி சிறப்பு வகுப்புக்கு நியமிப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை கடந்த 26, 27ஆம் திகதிகளில் கொழும்பில் மட்டுமே நடாத்தப்பட்டது. 14

### யோகசிகிச்சைக் கருத்தரங்கு

அகில இலங்கை யோகாசன ஸ்தாபனத்தின் சார்பில் நீரிழிவு நோய் பற்றிய கருத்தரங்கும், அந்நோயைக் குணப்படுத்த செய்ய வேண்டிய யோகாசன செய்முறைப் பயிற்சியும், யோக சிகிச்சை முறை பற்றிய கருத்தரங்கும் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணி தொடக்கம் 6.30 மணிவரை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் 238 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்ற கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

யோகாசனக் கலாநிதியும், அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தின் இயக்குனருமான ஸ்ரீ சிதானந்த சரஸ்வதி யோகி அவர்களும், பல யோகாசன நிபுணர்களும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு நீரிழிவைக் குணப்படுத்தும் யோக சிகிச்சை பற்றியும், யோகாசன செய்முறைப் பயிற்சி பற்றியும் கருத்துரை வழங்குவார்கள்.

### 3000 பேர் இதுவரை மரணம்

வட அயர்லாந்து கெரில்லாக்களுடன் தாம் ஆணித்தரமாக கடினமாக இருக்கப் போவதாய் பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் தெரிவித்திருக்கிறார்.

கடந்த 1969 ஆம் ஆண்டு முதல் ஐ. ஆர். ஏ. கெரில்லாக்கள் நடத்தும் சுதந்திரக் கிளர்ச்சி காரணமாக சுமார் 3000 பேர் அங்கு கொல்லப்பட்டுள்ளனர்.

### அமைச்சர் கோரிக்கை

திருச்சி நகரில் இலங்கைக்கான விசா வழங்கும் அலு...

## பண வீக்க விகிதம் வீழ்ச்சியடைகிறது

பண வீக்க விகிதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் 4.8 சதவீத அதிகரிப்புக் காணப்பட்டுள்ளதாலேயே பண வீக்க விகிதம் குறைந்துள்ளதாக மத்திய வங்கியின் சென்ற ஆண்டுக்கான அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

1990இல் 21 சதவீதமாக இருந்து வந்த வருடாந்த பணவீக்க விகிதம் சென்ற ஆண்டில் 12 சத வீதமாகக் குறைந்துள்ளதெனவும் அந்த அறிக்கை கூறுகிறது.

## இந்திய விமானத்தில் 110 பேர் திருமலைவந்தனர்

இந்தியாவின் அகதிமுகாம்களில் தங்கியிருந்த 35 குடும்பங்களைச் சேர்ந்த 110 பேர் நேற்று முன்தினம் இந்தியன் எயர்லைன்ஸ் விமான மூலம் திருமலை சீனன்குடா விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி இவர்களை விமான நிலையத்தில் வரவேற்றார்.

இதேவேளை இலங்கை அகதிகளின் 14 ஆவது குழு கடந்த செவ்வாய்க்கிழமை இராமேஸ்வரத்திலிருந்து இராமானுஜம் கப்பலில் தலைமன்னாருக்குப் புறப்பட்டது.

இக் குழுவில் 156 குடும்பங்களைச் சேர்ந்த 622 பேர் உள்ளனர்.

மேலும் 2000 ஈழ அகதிகள் மண்டப முகாமில் இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்காக வைக்கப்பட்டுள்ளனர்.

## மன்னார் மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கை

மன்னார் மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வவுனியா மாவட்டத்திற்கு அப்பால் செட்டிகுளத்திலுள்ள இராணுவ கட்டுப்பாட்டு எல்லையை விஸ்தரிக்கும் நோக்கில் இந்த இராணுவ நடவடிக்கை கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

## யாழ்.போதனாவைத்தியசாலையில் நடமாடும் நூலக சேவை

"யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களின் உடலியல், உளவியல்...

## தமிழிசை விழாநாளை நல்லூரில் ஆரம்பம்

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் இசைக் கலைஞர்களை இணைத்து நடாத்துகின்ற தமிழிசை விழாவினையொட்டி நல்லூர் கந்தசாமி கோவிலைச் சுற்றிய பகுதிகள் எழிற்கோலம் பூணுகின்றன.

எங்கும் விழாவுக்கான சுவரொட்டிகளும், பதாகைகளும் காணக்கூடியதாக உள்ளன. நல்லூர் வடக்கு வீதியில் அழகான கலையரங்கம் உருவாகி வருகின்றது. மின் விளக்குகளும், ஒலிபரப்புச் சாதனங்களும் ஏற்படுத்தப்படுகின்றன.

குடாநாட்டிலிருந்தும் மற்ற மாவட்டங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கானவர்கள் விழாவுக்கு வந்து கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதனால் அவர்களின் வசதிகள் கருதி பல ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. விழாவுக்கு வரும் மக்களின் தேவைகளையும், ஒழுங்குகளையும் தமிழீழக் காவல்துறையினரும் மாணவ அமைப்புத் தொண்டர்களும் ஏற்படுத்திக் கொடுப்பார்கள்.

எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 6 ஆம் திகதி புதன்கிழமை வரையிலான 5 தினங்களும் தினசரி மாலை 5 மணிக்கு தமிழிசை விழா ஆரம்பமாகி இரவு 11 மணிக்கு முடிவுறும். தமிழீழத்தின் நூறு இசைக்கலைஞர்கள் பங்கேற்கும் பெருமைமிகு பெருவிழாவுக்கு இசைவிரும்பிகளையும், தமிழ் உணர்வுள்ளோர்களையும் வருகைதந்து சிறப்பிக்குமாறு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் அழைப்புவிட்டிருக்கின்றது.

## பிச்சை எடுக்க அனுமதிகோரி விசித்திர உண்ணாவிரதம்

தங்களைப் பிச்சை எடுக்க அனுமதிக்கவேண்டும் என்று கோரி 280 பேர் உண்ணாவிரதம் இருந்த விசித்திர சம்பவம் தமிழ்நாடு சேலத்தில் நிகழ்ந்துள்ளது.

இப் பகுதியில் அரசு நடத்தும் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லம் உள்ளது. இவர்களுக்கு நாளுக்கு இருமுறை சாப்பாடு. காலை, மாலை வேளைகளில் தேநீர், வாரத்துக்கு ஒருமுறை அசைவ உணவு என்று அளிக்கப்படுகின்றது.

## மேதின அழைப்பு

இன்று மருதனாமடம் சந்தியிலிருந்து

பி. ப. 2.00 மணிக்கு ஆரம்பமாகவிருக்கும்

மேதின பேரணியிலும்

நடாத்தப்பட்டது. 14

## லண்டன் முன்னணியில்

குற்றச் செயல்களில் லண்டன் நகரம் ஐரோப்பாவின் தலைநகரங்களை விஞ்சி வருகிறது என்பதை சமீப ஆய்வு காட்டுகிறது.

பலாத்கார குற்றங்கள் அதிகம் கொண்ட நகராக பேர்லின் விளங்கிய போதிலும் மொத்தக் குற்றங்களில் லண்டனே முன்னணியில் உள்ளது.

குறிப்பாக கொள்ளையும் கார்த்திருட்டுக்களுமே லண்டனில் அதிகமாக உள்ளன.

திருச்சி நகரில் இலங்கைக்கான விசா வழங்கும் அலுவலகமொன்றைத் திறக்குமாறு அமைச்சர் செல்லச்சாமி பிரதமரைக் கோரியுள்ளார்.

## மதில் விழுந்து மூவர் மரணம்

இருலப்பனையில் தர்மபால வீதி பாலத்திற்கும் பக்கத்தில் நீரோடை ஒன்றை வெட்டிச் சுத்தஞ் செய்துகொண்டிருந்த அறுவர் மீது மதில் ஒன்று விழுந்ததினால் மூவர் அவ்விடத்திலேயே மரணமானார்கள். மற்றைய மூவரும் ஆபத்தான நிலையிலுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை

## மெய்வல்லுநர் போட்டி

கல்வியங்காடு ஞான பாஸ்கரோதய சங்க வலை பந்தாட்டக் கழக வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி திரு சிவ ஐயாத்துரை தலைமையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது

சிறப்பு விருந்தினர்களாக விடுதலைப்புலிகள் பிரமுகர் திரு பிட்டு. இராமசேவகர் திரு எஸ் செல்லத்துரை ஆகியோர் கலந்துகொள்வர்.

பெற்று வரும் நோயாளர்களின் உடலியல், உளவியல் நலன் கருதி நடமாடும் நூலகசேவை ஒன்றினை ஆரம்பிக்க யாழ் போதனா வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச்சங்கம் தீர்மானித்துள்ளது.

இந்நூலக சேவைக்குத் தேவையான கதைகள், கவிதைகள், நாவல்கள், வெளியீடுகள், சஞ்சிகைகள் போன்றவற்றை மேற்படி சங்கத்துக்கு அன்பளிப்புச் செய்து உதவுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேதின பேரணியிலும்

அதைத்தொடர்ந்து யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும் மாபெரும் கூட்டத்திலும் யாழ். மாவட்ட பிரதேசத்திலுள்ள சகல இறைச்சிக் கடை உரிமையாளர்களும் ஊழியர்களும் தங்கள் தொழில் ஸ்தாபனங்களை மூடி அப்பேரணியில் பங்குபற்றுமாறு யாழ். மாவட்ட இறைச்சிக் கடை உரிமையாளர்கள் சங்கத்தின் சார்பில் வேண்டுகிறோம்.

நன்றி

அ. அன்டன் — தலைவர்

க. சி. கிருஷ்ணன் — செயலாளர்

05002

## புயலாக...
# லட்சிய பயணம் வெல்லும்...

கல்லும் முள்ளும், ஏற்றமும் இறக்கமும் நிறைந்த, மிகவும் கடினமான பாதையூடாக எமது விடுதலைப் பயணம் தொடர்கிறது. எதிரிகளானவர் இந்தப் பாதை வழியே மேலும் முட்டுக்கட்டைகளைப் போடலாம். எமது பயணத்திற்குச் சோர்வையும் களைப்பையும் ஏற்படுத்த இடையூறுகளை விளைவிக்கலாம். எத்தனை தடைகள் ஏற்பட்டபோதும், எத்தனை துன்பங்கள் ஏற்பட்டபோதும் கொண்ட கொள்கையின் நம்பிக்கையும் அந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட உறுதியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடம் உள்ளவரை எமது இலட்சியப் பயணம் வெற்றியில் முடியும் என்பது நிச்சயம்.

ஒரு விடுதலைப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் பங்கு பிரதானமானது. தமிழீழப் பாட்டாளி வர்க்கமானது, ஒருபுறம் முதலாளித்துவ சுரண்டல் முறையையும், மறுபுறம் இனவாத ஒடுக்குமுறையையும் சந்தித்து நிற்கிறது. இந்த இருதலைப்பட்ச முரண்பாட்டில் இனவாத ஒடுக்குமுறையே பிரதானமானது.

# முதன்மைப் பணி...

இன ஒடுக்குமுறையைத் தனது பிரதான எதிரியாகச் சந்தித்து நிற்கும் தமிழீழப் பாட்டாளி வர்க்கம் அந்த இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவதையே தனது முதன்மையான பணியாகக் கொள்ளவேண்டும். ஏனென்றால், இன ஒடுக்குமுறையானது தமிழ்ப்பாட்டாளி வர்க்கத்தின் வாழ்க்கையையே சீரழிக்க எத்தனிக்கிறது. எனவே, இன ஒடுக்குமுறைக்கெதிராகப் போராடுவது தவிர்க்கமுடியாத வரலாற்று நிர்ப்பந்தமாக எழுந்துள்ளது. இந்தப் போராட்டமானது வர்க்கப் போராட்ட வரம்புகளுக்கு அப்பால், ஒரு தேசிய போராட்டமாக, தேசிய மக்களின் போராட்டமாக, தேசிய வர்க்கங்களின் ஒன்றிணைந்த போராட்டமாக உயர் வடிவம் பெறுகிறது. ஒரு தேசிய விடுதலை இயக்கத்துடன் அணிசேர்ந்து கொள்வதன்மூலமே தமிழீழத் தொழிலாளர் வர்க்கம் தேசிய போராட்டத்திற்கு உருப்படியான முறையில் பங்களிக்க முடியும். இதுவே எமது உழைக்கும் மக்களின் விடிவிற்கும் விமோசனத்திற்கும் வழிகோலும்.

# நேசக் கரம் நீட்டுகிறோம்...

சிங்களப் பாட்டாளி வர்க்கத்திற்கு நாம் எமது நேசக் கரத்தை நீட்டி நிற்கிறோம். சிங்கள ஆளும் வர்க்கத்தால் ஒடுக்கப்பட்டு நசுக்கப்பட்டு, சுரண்டப்பட்டு வரும் சிங்களப் பாட்டாளி மக்களை நாம் ஒரு நேச சக்தியாகவே கருதுகிறோம்.

தமிழ் சிங்களப் பாட்டாளிகள் மத்தியில் வர்க்க ஒருமைப்பாடு ஏற்படுவதானால் தமிழரின் தன்னாட்சி உரிமையை சிங்களத் தொழிலாளர் வர்க்கம் அங்கீகரிக்கவேண்டும் தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்க வேண்டும். ஆனால் அதேசமயம் தென்னிலங்கைப் பாட்டாளி வர்க்கமானது சிங்கள-பௌத்த பேரினவாத ஆட்சியமைப்பிற்கு முண்டு கொடுத்து நிற்கும் வரை தமிழ்-சிங்கள வர்க்க ஒருமைப்பாடு சாத்தியமாகப் போவதில்லை.

# சிங்களவரும் உணர்வர்..,

பேரினவாத சித்தாந்தப் பிடியிலிருந்து விடுதலை பெற்று விழிப்புணர்வு அடையும் பொழுதுதான் தமிழரின் சுதந்திரப் போராட்டத்தின் புரட்சிகரத் தன்மையைச் சிங்கள மக்கள் புரிந்துகொள்வார்கள் தமிழரின் விடுதலையில்தான் தமக்கும் விமோசனம் உண்டு என்ற உண்மையை உணர்ந்துகொள்வார்கள்.

பாட்டாளி வர்க்கத்தின் எழுச்சித் தினமாகிய இன்று நாம் ஒரு விதி செய்துகொள்வோம்.

எத்தகைய சவால்களை எதிர்கொண்டபோதும் எமது இலட்சியப் பயணத்தில் உறுதி தளரமாட்டோம் என ஒரு வீர சபதம் செய்வோம் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## மலிவு விற்பனை

வாடிக்கையாளரின் நன்மைகருதி எமதுமலிவு விற்பனை 31-05-92வரை நீடிககப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**
(பாரதி நிலையத்து அருகாமையில்)
பருத்தித்துறை வீதி, நல்லூர்.

05001


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 01-05-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## இன்று மூடப்படும்

வட பிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாச இணைச் சங்கங்களின் நிர்வாகத்திற்குட்பட்ட சகல சிகை அலங்கரிப்பு நிலையங்களையும் மே தினத்தை முன்னிட்டு இன்று மூடுமாறும் நண்பகல் 12 மணியளவில் சமாசக் காரியாலயத்தில் கூடுமாறும் சமாசச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (18]

## தமிழகத்தில் ...

ராக மாறிவரும் இந்த நேரத்தில் அதைத் துணிச்சலோடு சந்திக்க ஒன்றுபட்ட பத்திரிகையாளர்களின் இயக்கம் ஒன்று உடனடியாகத் தேவைப்படுகிறது.

### "துக்ளக்" ஆசிரியர் "சோ" கருத்துத் தெரிவிக்கையில்

பத்திரிகைகளை இந்த அரசு மிரட்ட ஆரம்பித்திருக்கிறது தங்களைப் பற்றி எந்த விமர்சனமும் வரக்கூடாது என்றும் அப்படி விமர்சனம் செய்யும் உரிமை யாருக்குமே இல்லை என்றும் இன்றைய முதல்வர் நினைக்கிறார் போலிருக்கிறது

நக்கீரன் பத்திரிகை விவகாரத்தைப் பொறுத்த வரையில் அந்தப் பத்திரிகையின் பிரதிகள் கொளுத்தப்படுவதும் ஏஜென்டுகள் மிரட்டப்படுவதும் ஆளுங்கட்சியினரே முன்னின்று நடாத்திய அராஜகங்கள்

ஒன்றுமேயில்லாத விஷயங்களுக்குக்கூட உரிமைப் பிரச்சினை என்று கூறி ஆளுங்கட்சி தனது மெஜாரிட்டி பலத்தை வைத்துக்கொண்டு பத்திரிகை உலகை மிரட்டத் தொடங்கியிருக்கிறது. இதையெல்லாம் சொல்லும் அதே நேரத்தில் நான் வேறொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன், இன்றைய பத்திரிகை உலகில் தயங்காமல் பொய் சொல்வதும் தாறுமாறாக நாகரிகத்தை மீறிய விமர்சனங்களைச் செய்வதும் கற்பனைச் செய்திகளாக வெளியிடுவதும் அதிகமாகி வருகின்றன. இதுவும் கண்டிக்கத்தக்க போக்குத்தான்.

பத்திரிகைகள் இம்மாதிரி நடந்துகொள்ளும் போதுகூட அவற்றை சட்டத்தின் மூலம் சந்திக்க வேண்டுமே தவிர ஆளும் கட்சியின் குண்டர்கள் மூலமாக அல்ல

நீதி மன்றங்களில் ஏற்படும் தாமதங்களை நீக்குவதற்கும் சட்டத்தில் இருக்கும் சில ஓட்டைகளை அடைப்பதற்கும் மத்திய மாநில அரசுகள் முயற்சி செய்தால் அந்த முயற்சி நேர்மையான முயற்சியாக இருந்தால் - நான் அதை வரவேற்பேன்.

இந்த மாதிரி வழிகளை ஆராய்வதை விட்டுவிட்டு வன்முறையை நம்ப ஆரம்பித்திருக்கிறது ஆளுங்கட்சி. இந்தச் செயல்களைப் பத்திரிகை உலகமே கண்டிக்க வேண்டும்"

### தி.மு.க தலைவர் மு. கருணாநிதி கருத்துத் தெரிவிக்கையில்

"தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் எமெர்ஜென்சி பிரகடனப் படுத்தாமலேயே பத்திரிகைகளுடைய உரிமைகள் சட்டம்போட்டுப் பறிக்கப் படாமலேயே, பத்திரிகைகளே தங்களுடைய சுதந்திரத்தை முடக்கிக் கொள்கின்றன" என்று கூறியுள்ளார்

ஆ. முதல்வர் ஜெயலலிதாவும், அவரது அரசும் சட்டசபை சபா நாயகரும், ஒரு விலங்கமான ஜனநாயகக் காவலை வைத்துள்ளனர்

அந்தப் பத்திரிகைத் துறையிடம் இவர்கள் ஒரு பாடம் படிக்கவேண்டிவரும் அல்லது படியிறங்கிப் போக வேண்டி வரும்.

# வடமராட்சி கடற்பகுதியில் கடற்படை தாக்குதல் அதிகரிப்பு

வடமராட்சி கடற்பிரதேசப்பகுதிகளில் ஸ்ரீலங்கா கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்து வருவதனால் இப்பகுதி மீனவர்களும், பொதுமக்களும் பீதியடைந்துள்ளனர்; இதனால் மீனவர்கள் பொருளாதாரரீதியிலும் மிகுந்த பாதிப்புகளுக்குள்ளாகி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன் மாலை 6 30 மணியளவில் பருத்தித்துறைக் கடல் பிரதேசப் பகுதியில் ஸ்ரீலங்கா கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர். சுமார் அரைமணிநேரம் இத்தாக்குதல்கள் இடம்பெற்றன. (11-09-15)

# தம்புல்ல விஹாரை தேரரின் ஆவணங்களே எரிந்தன

தம்புல்ல ரஜமகா விஹாரையின் நூலகத்தில் பெறுமதிவாய்ந்த பல நூல்கள் எரிந்ததாக வெளியான செய்திகளை ஜனாதிபதியினால் அமைக்கப்பட்ட புத்தசாசன அமைச்சு விசாரணைக்குழு மறுத்துள்ளது.

விஹாரையின் நம்பிக்கை பொறுப்பாளராக உடுகம புத்தரக்கித தேரோவின் அறையிலிருந்த அலுமாரியில் இருந்த சில ஆவணங்களும் பத்திரங்களும் வெளியே எடுக்கப்பட்டு எரிக்கப்பட்டதாகவும் இதில் நூல்கள் ஏதும் இருக்கவில்லை எனவும் விசாரணைக்குழு தெரிவித்தது.

பொலிஸ் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## ● முஸ்லிம் கிராமம் மீது
# தாக்குதல் நடைபெற்ற போது 72 பேர் காவற்கடமையில்!

பொலநறுவை அழிஞ்சிப்பொத்தானையில் முஸ்லிம் கிராமம் தாக்கப்பட்டபோது அங்கு 27 பொலிஸாரும், 45 முஸ்லிம் ஊர்காவற்படையினரும் இருந்தனர் என இராணுவ பேச்சாளர் கேணல் சரத்முனசிங்க நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்

தொடர்ந்தும் ஊர்காவற்படை அமைப்புகளுக்கு அரசு ஆயுதங்களை வழங்குவதா என்பது குறித்து மீள்பரிசீலிக்கப்படுவதாக செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட பிரட்கன் வீரக்கோன் அப்போது தெரிவித்தார்

இதேவேளை பொலநறுவை தமிழ்க்கிராமங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 70 தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# களுத்துறை உல்லாச விடுதி சமய சங்கங்கள் எதிர்ப்பு

களுத்துறை மாவட்டத்தில் கத்துருகுருந்தைக்கும் வெலிகந்தவிற்கும் இடையில் அரசினால் அமைக்கப்படவுள்ள உல்லாசப்பயணிகள் விடுதிவலயத்தை எதிர்த்து அப்பகுதி பௌத்த கிறிஸ்தவ சங்கங்கள் பெரும் எதிர்ப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன

இந்த உல்லாசப் பயணிகள் விடுதியினால் இப்பகுதியின் வாழ்க்கை முறை பாதிப்படையலாம் என இவர்கள் எச்சரித்துள்ளனர்.

இப்பகுதியில் எழுந்த எதிர்ப்புகளையடுத்து திட்டத்தை கைவிட மேற்குமாகாணசபை முதலமைச்சர் சுசில் முனசிங்க ஒப்புக்கொண்டுள்ள போதிலும் உல்லாசப்பயணிகள் சபை தனது திட்டத்தை கைவிடுவதாக இல்லை எனத்தெரிவிக்கப்படுகிறது

# சமாதானத் தீர்வைத் தருமாறு அரசிடம் பிக்குகள் கோரிக்கை

ஸ்ரீலங்கா அரசு திட்டவட்டமான சமாதானத் தீர்வுகளைத் தரவேண்டும் என விரும்புகிறோம்" இவ்வாறு யாழ் வந்து திரும்பிய பிக்குகள் குழுவினர் தெரிவித்துள்ளனர்

அப்படி அரசு சமர்ப்பிக்கும் திட்டத்தைத் தாம் மீண்டும் வடக்கிற்கு எடுத்துச் செல்வோம் எனவும் அவர்கள் கூறியதாக பி.பி.ஸி. தெரிவித்தது

## உயிலங்குளம்...

கடந்த வருடம் ஏப்ரல் மாதத்திலும் வவுனியா மன்னார் வீதியில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை தெரிந்ததே.

## நேற்றுடன் முடிவு

1991 ஆம் ஆண்டுக்கான க. பொ. த உயர்தர பரீட்சை எதுவித தடங்கலுமின்றி நேற்றுடன் முடிவடைந்தது.

யாழ் மாவட்டத்தில் 66 நிலையங்களிலும், கிளிநொச்சியில் 3 நிலையங்களிலும், முல்லைத்தீவில் 3 நிலையங்களிலும் இப்பரீட்சை நடைபெற்றது. 15,18